# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 02 –11–2018– வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

தூய்மை இந்தியா திட்டம் 2018–2019–ன்கீழ் நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளை பிரித்து உரக்கிடஙகிற்கு கொண்டுவர ஏதுவாக அளவுகோலின் அடிப்படையில் குழித்துறை நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கு BOV-5 எண்ணம் (Battery Operator Vehicle) ரூ.9.00 லட்சம் மற்றும் LCV -1 எண்ணம் (Light commercial vehicle) ரூ.5.60 லட்சம் மொத்தம் ரூ.14.60 லட்சம் மதிப்பீட்டில் வாஙகுவதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனஙகள் வாஙகுவதற்கு நிர்வாக அனுமதி கேட்டு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு.

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3198**
**அனுமதி வழஙகப்பட்டது.**

**குழித்துறை நகர் மன்றத்தின் 30–11–2018 வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

பொருள் எண் .1

நகராட்சிக்குட்பட்ட குழித்துறை நகர புல எண்.D9/74 அரசு புறம்போக்கு சாலை என வகைப்படுத்தப்பட்டு 0.20.36 ஏர்ஸ் பரப்பளவு கொண்டுள்ளது. மேற்படி அரசு புறம்போக்கு சாலை நிலத்தை 11 நபர்கள் ஆக்கிரமித்துள்ளார்கள். எனவே பொதுமக்கள் நலன் கருதி தமிழ்நாடு பொது வளாகம் ஆக்கிரமிப்பு சட்டம் 1975–ன்படி ஆக்கிரமிப்புகளை அகற்றி நகராட்சி பாதையாக பராமரிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.1841/2018/ந.அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மான எண். 3199**
**அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் .2

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 10’x8’ என்ற அளவில் நூற்றாண்டு விழா விளம்பர பேனர்கள் பிரிண்டிங செய்வதற்கு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1) | M/S. Hameedhees printers,<br>No.27, Muthukumaran Street,<br>K.K. Nagar, Madurai. | Rs.2240/- + 12% GST |
| 2) | M/S. Devan Offset Printers,<br>4/840 Annai Velankanni Nagar,<br>Anna Nagar, Madurai. | Rs.2300/- +12% GST |
| 3) | M/S. Alamelu Printing press & Screen,<br>No.2, Chellathamman koil Street,<br>Simmakkal, Madurai. | Rs.2350/- + 12 GST |

அ.கு.:– அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் M/S. Hameedhees printers, Madurai நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள Hameedhees நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கி பேனர் வாஙகியமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3200**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் .3</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொதுசேவைகளுக்கு பயன்படுத்தப்படும் 7 வாகனங்களுக்கு GPS கருவி மாதாந்திர வாடகை அடிப்படையில் பொருத்தி கண்காணித்தல், சர்வீஸ் வசதி, தினசரி ரிப்போர்ட் வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள ரூ.1,20,000/–மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 17–11–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | 1) M/S. Soft berry Solution,<br>70, Ist floor, 120 feet road,<br>Soodamanipuram, Karaikudi,<br>Tamil Nadu | மதிப்பீட்டு விகிதம் |
| 2 | 2) M/S. Mobitech Wireless Solution,<br>No.1/4, Vengamedu, Erode road,<br>Perundurai , Erode District,<br>Tamil Nadu | மதிப்பீட்டை விட 8.33% அதிகம் |

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/S. Soft berry Solution, Karaikudi நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழஙகியமைக்கும் மன்றம் அனுமதி வழஙகலாம்.
3) இப்பணிக்கான தொகை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3201**
**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் .4</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட காய்கறி சந்தையினுள் காலியாக உள்ள இடத்தில் சிமெண்ட் தளம் அமைத்து Shed அமைக்கும் பணி மேற்கொள்ள மதிப்பீடு ரூ.6,20,000/– தயார் செய்யப்பட்டு 17–11–2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி. ஜஸ்டின்குமார் | மதிப்பீட்டை விட 1.30% குறைவு |
| 2 | திரு.டி. பிரேம்குமார் | மதிப்பீட்டை விட 0.17% குறைவு |

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் திரு.டி. ஜஸ்டின்குமார் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) இப்பணிக்கான தொகை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3202**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 5</u>

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018—2019—ன்கீழ் ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட இடைவிளாகம் பகுதியில் சிறுமின்விசை அமைக்கும் பணி மேற்கொள்ள 8—11—2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.A. ஆன்றனி, | மதிப்பீட்டை விட 2.08% குறைவு |
| 2 | திரு. A. அணில் குமார் | மதிப்பீட்டை விட 1.88% குறைவு |

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1—ல் திரு.A. அன்றனி கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3203**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிய வகையில், பொது மக்கள் தெரியும் வண்ணம் மக்கள் செய்தி தொடர்பு அலுவலகம் மூலம் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையிலும், மேற்படி கடைகள் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வருவது தொடர்பாக அனைத்து செலவுகளுக்கும் உத்தேசமாக ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3204**
**அங்கீகரிக்கப்பட்டது**

பொருள் எண் . 7

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு தீர்மான எண்.3181, நாள் 26–09–2018–ன்படி அனைத்து கடைகளும் பொது ஏலம் விட மன்றம் அனுமதி அளித்துள்ளதின் அடிப்படையில் 20–11–2018–ல் நகராட்சி சொந்தமான 9 ஆண்டுகள் முடிவடைந்த அனைத்து கடைகளுக்கும் பொதுஏலம் நடத்தப்பட்டதில் வரப்பெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு உள்ளது.

| வரிசை எண் | குத்தகைதாரர் பெயர் | கடை எண் | பழைய கடை வாடகை ரூபாய் | தற்போதைய ஏலத் தொகை ரூபாய் | தற்போதைய ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் | உச்சத் தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1) மார்த்தாண்டம் காய்கறி சந்தை IDSMT கடைகள் – 28 | | | | | | |
| 1 | சி. ஸ்ரீகுமார் | 1 | 1575 | 12000 | 7000 | 12000 |
| 2 | பி. மனோகரன் | 1 | 1575 | 10000 | 9559 | |
| 3 | எ. அலாவுதீன் | 2 | 1575 | 8000 | 10000 | 10000 |
| 4 | ஸ்ரீஜீ | 2 | 1575 | 9000 | 6000 | |
| 5 | எ. அலாவுதீன் | 3 | 1575 | 8000 | 4000 | 8000 |
| 6 | ஸ்ரீகுமார் | 3 | 1575 | 7500 | 6000 | |
| 7 | சி. விஜயகுமார் | 4 | 1575 | 6000 | 4000 | 6000 |
| 8 | சி. இன்பம் | 5 | 1575 | 6000 | 4000 | 6000 |
| 9 | சி. நடராஜன் | 6 | 1600 | 6000 | 4700 | 6000 |
| 10 | என். சலாவுதீன் | 7 | 1600 | 3000 | – | 3000 |
| 11 | எம். சதீஷ்குமார் | 12 | 1600 | 3000 | 3500 | 3500 |
| 12 | பி. பால்தாஸ் | 15 | 1600 | 3000 | – | 3000 |
| 13 | அய்யப்பன் | 22 | 1600 | - | 4500 | 4500 |
| 14 | பரமேஸ்வரன் | 23 | 1600 | 3000 | 2500 | 3000 |
| 15 | கே. தாஸ் | 28 | 1600 | – | 5000 | 5000 |
| II) மார்த்தாண்டம் கருங்கல் சாலை கடைகள் –43 | | | | | | |
| 1 | பி. ரதீஷ் | 1 | 1980 | - | 10500 | 10500 |
| 2 | ஜி. சிசிலட் ஞானபாய் | 2 | 1980 | 10500 | 10000 | 10500 |
| 3 | எஸ். அனிஷ் | 3 | 1980 | 10500 | 9500 | 10500 |
| 4 | வினுாஸ் | 4 | 1980 | 15000 | - | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | ஆனந்த சந்தியா | 4 | 1980 | 7000 | 5500 | 7000 |
| 6 | மனோகரன் | 4 | 1980 | 17000 | 12005 | 17000 |
| 7 | ரெஜீவன்லால் | 5 | 2025 | 20000 | 15000 | 20000 |
| 8 | அஜிதா ஷெல்லி | 5 | 2025 | - | 6500 | |
| 9 | குமரேஷ் | 5 | 2025 | - | 13101 | |
| 10 | சிவகுமார் | 5 | 2025 | 19500 | 10150 | |
| 11 | குளோறி வசந்த மோகன்போஸ் | 6 | 1980 | 12500 | 8300 | 12500 |
| 12 | ஆனந்த் போஸ் மகிலா | 6 | 1980 | 12000 | - | |
| 13 | எ. றாபர்ட் சிங | 7 | 1350 | 11000 | 6000 | 11000 |
| 14 | பி. டென்னிசன் | 7 | 1350 | 10500 | 6000 | |
| 15 | கே. ராமகிருஷ்ணன் | 8 | 1600 | 11000 | 6500 | 11000 |
| 16 | எம். ராஜன் | 9 | 1485 | 11100 | 5000 | |
| 17 | வி. வினுாஸ் | 9 | 1485 | 11150 | - | 11150 |
| 18 | ஜார்ஜ் | 9 | 1485 | - | 11101 | |
| 19 | எம். ராஜன் | 10 | 1650 | 11200 | 5000 | 11200 |
| 20 | ஜார்ஜ் | 10 | 1650 | - | 11101 | |
| 21 | குமாரதாஸ் | 11 | 1650 | 11100 | 7000 | 11100 |
| 22 | செல்லசுவாமி | 12 | 1650 | 11100 | 5500 | 11100 |
| 23 | எஸ். சர்ஜன் | 13 | 3250 | 11100 | 10500 | 11100 |
| 24 | சி. பிரசாத் | 14 | 3250 | 11500 | - | 11500 |
| 25 | மனோகரன் | 15 | 3250 | 11000 | 6500 | 11000 |
| 26 | ஆர். ரமேஷ் | 16 | 3250 | 12000 | 6500 | 12000 |
| 27 | ற்றி. குமரேசன் | 17 | 3250 | 13101 | - | 13101 |
| 28 | சுகுமாரன் | 17 | 3250 | 7000 | - | |
| 29 | எஸ். செல்வராஜ் | 18 | 3250 | 11000 | 6500 | 11000 |
| 30 | எஸ். செல்வராஜ் | 19 | 3250 | 11000 | 6500 | 11000 |
| 31 | ஜி. சுரேஷ் ஜெயபால் | 20 | 3250 | 11000 | 65000 | 11000 |
| 32 | ஹரிகிருஷ்ணன் | 21 | 3250 | 11000 | 6500 | 11000 |
| 33 | ஹரிகிருஷ்ணன் | 22 | 3250 | 11000 | 6500 | 11000 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 34 | ஹரிகிருஷ்ணன் | 23 | 3250 | 11000 | - | 11000 |
| 35 | ஆனந்த் போஸ் மகிலா | 23 | 3250 | 10000 | - | |
| 36 | டேனி யேசுதாஸ் | 24 | 3250 | 11000 | - | 11000 |
| 37 | ற்றி. முருகேஷ் | 25 | 3250 | 11000 | - | 11000 |
| 38 | ஆனந்த போஸ் மகிலா | 26 | 3250 | 11000 | - | 11000 |
| 39 | புரூனோ | 27 | 3250 | 11000 | - | 11000 |
| 40 | வி.எஸ். சிவபிரசாத் | 28 | 3250 | 11000 | 9000 | 11000 |
| 41 | பி. லிங்கேஸ்வரன் | 29 | 1320 | 10100 | - | 10100 |
| 42 | ஜார்ஜ் | 30 | 1320 | 10000 | - | |
| 43 | பி. சஙகர்ராம் | 30 | 1320 | 10500 | 6000 | 10500 |
| 44 | எஸ். றாபின்ராஜ் | 31 | 4875 | 15000 | 13000 | 15000 |
| 45 | இஸ்மாயில் | 31 | 4875 | 13500 | - | |
| 46 | சுகுமாரன் | 31 | 4875 | 14500 | - | |
| 47 | சசி | 32 | 4875 | 15000 | - | |
| 48 | ஹேமலதா தேவி | 32 | 4875 | 15500 | - | 15500 |
| 49 | சி. அருள்தாஸ் | 33 | 840 | 5000 | - | 5000 |
| 50 | கே. ஜெயகுமார் | 34 | 1440 | 10000 | - | 10000 |
| 51 | கனகமணி | 35 | 1440 | 10000 | - | 10000 |
| 52 | எ. கிறிஸ்துதாஸ் | 36 | 1440 | 7600 | - | 7600 |
| 53 | கே. ஸ்ரீனிவாசன் | 37 | 1440 | 8000 | - | 8000 |
| 54 | என். ராதிகா | 38 | 1440 | 8000 | - | 8000 |
| 55 | எஸ். றசல் | 42 | 780 | 5000 | - | 5000 |
| | சுபின்ராஜ் | 43 | 1000 | 5000 | - | 5000 |
| III) மார்த்தாண்டம் பேருந்து நிலைய பழைய கடைகள் – 15 | | | | | | |
| 1 | சோமன் | 1 | 4576 | 6000 | 5500 | 6000 |
| 2 | சோமன் | 2 | 4376 | 5500 | - | 5500 |
| 3 | ஹமீதா ஆமீன் | 4 | 4045 | - | 5000 | 5000 |
| 4 | ஹமீதா ஆமீன் | 5 | 4054 | - | 5100 | 5100 |
| 5 | சுரேஷ் | 6 | 3543 | 5500 | 3850 | 5500 |
| 6 | ஜெயசிங | 7 | 3508 | 5500 | 3800 | 5500 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | அகஸ்டின் சகாயதாஸ் | 9 | 3517 | 4000 | 3517 | 4000 |
| 8 | நாராயண பிரசாத் | 10 | 3543 | 4000 | 3543 | 4000 |
| 9 | பொன் அலெக்சாண்டர் | 11 | 3517 | 4000 | 3303 | 4000 |
| 10 | இராதாகிருஷ்ணன் | 12 | 3303 | 4000 | 3517 | 4000 |
| 11 | அர்ஜினன் | 13 | 3080 | 4000 | 3080 | 4000 |
| 12 | ஜெகதீஷ் | 15 | 26781 | 62000 | 76102 | |
| 13 | ஜெஸ்டின்ராஜ் | 15 | 26781 | 90000 | 81000 | |
| 14 | ரெஜஷ் டேனியல் | 15 | 26781 | 92000 | 90000 | 92000 |
| IV) வெட்டுவெந்நி அலுவலகம் முன்னால் உள்ள கடைகள் – 7 | | | | | | |
| 1 | சி. சிவகுமார் | 1 | 15361 | 18000 | 16000 | 18000 |
| 2 | சி. ஶ்ரீகுமார் | 2 | 12852 | 15000 | 12000 | 15000 |
| 3 | ற்றி. வைகுண்ட பிரபு | 3 | 7705 | 13000 | - | 13000 |
| 4 | ற்றி. வைகுண்ட மணி | 4 | 8669 | 12000 | 10000 | 12000 |
| 5 | ரூஸ்லெட் ஆர்தர் | 5 | 10647 | 8000 | - | 8000 |
| V) வெட்டுவெந்நி பி.பி.முனுசாமி வணிகவளாக கடைகள் –23 | | | | | | |
| 1 | கே. சலீம் | F1 | 9315 | 11000 | - | 11000 |
| 2 | எம்.எஸ். சாரிகா | F3 | 10950 | 11000 | - | 11000 |
| 3 | என். அமுதா | F5 | 3042 | 5000 | - | 5000 |
| 4 | எம். சேகர் | F6 | 3264 | 5000 | - | 5000 |
| 5 | விஜயகுமார் | G1 | 8067 | 11050 | 11500 | 11050 |
| 6 | தீபா எலையன்ஸ் | G6 | 6752 | 7000 | - | 7000 |
| 7 | முகம்மது முஸ்தபா | G7 | 6877 | 8000 | - | 8000 |
| 8 | ற்றி.எல். ஜோஸ் | G10 | 7968 | 9000 | - | 9000 |
| VI) குழித்துறை வணிகவளாக கடைஎண் –8 | | | | | | |
| 1 | ஜி. டொனால்டு | 1 | 5323 | 12000 | 11000 | 12000 |
| 2 | ராஜேந்திரன் | 1 | 5323 | 11500 | - | |
| 3 | ஆஷா காட்வின் | 2 | 2249 | 7500 | - | 7500 |
| 4 | ராஜேந்திரன் | 2 | 2249 | 7000 | - | |
| 5 | ராஜேந்திரன் | 3 | 2249 | 7500 | - | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | ஆஷா காட்வின் | 3 | **2249** | 7500 | - | 7500 |
| 7 | ராஜேந்திரன் | 5 | **3955** | 6000 | - | 6000 |
| 8 | மணிகண்டன் நாயர் | 8 | **3127** | 5000 | 4000 | 5000 |
| VII) மார்த்தாண்டம் பேருந்து நிலைய புதிய கடை | | | | | | |
| 1 | எஸ். சசிகுமார் | A4 | | – | **10600** | **10600** |

**அ.கு.:–** வரிசை எண்.1–ல் வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளில் மார்த்தாண்டம் காய்கறி சந்தைக்குள் IDSMT திட்டத்தில் கட்டப்பட்ட 28 கடைகளில் கடை எண்.1, 2, 3 ஆகிய மூன்று கடைகளுக்கு ஒருநபர்கள் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள் அவர்கள் கோரியுள்ள தொகையானது கடந்த வருட தொகையினை விட 7 மடஙகு அதிகமாக உள்ளது. ஆகவே உயர்ந்த தொகைக்கு உரிமம் வழஙகலாம். கடை எண்.4, 5, 6, 22, 28–க்கு ஒருநபர் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள். அவர்கள் கோரியுள்ள தொகை கடந்த வருட தெகையினை விட 3 மடஙகு அதிகமாக உள்ளது. ஆகவே உயர்ந்த தொகை உரிமம் வழஙகலாம். கடை எண்.7, 12, 15, 23–க்கு ஒரு நபர் வீதம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்கள் அவர்கள் கோரியுள்ள தொகை கடந்த வருட தொகையினை விட ஒருமடஙகு அதிகமாக உள்ளது. கடை எண்.8, 9, 10, 11, 13, 14, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27 ஆகிய 16 கடைகளுக்கு எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. எனவே மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு.

வரிசை எண்.2–ல் மார்த்தாண்டம் கருஙகல் சாலையில் அமைந்துள்ள 43 கடைகளில் கடை எண்.39, 40, 41 கடைகளுக்கு எவரும் வைப்புத் தொகை செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. மீதமுள்ள கடைகளுக்கு வரப்பெற்ற ஏல கேள்வியானது கடந்தவருட குத்தகை தொகையினை விட 5 மடஙகுக்கு மேல் அதிகமாக உள்ளது. ஆணையாளரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

வரிசை எண்.3 மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள 15 பழைய கடைகளில் கடை எண்.3, 8, 14–க்கு எவரும் வைப்புத்தொகை செலுத்தி ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. கடை எண்.1, 2, 4 முதல் 7 வரையுள்ள கடைகளுக்கு கோரியுள்ள ஏலத்தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட 50% அதிகமாகவுள்ளது. கடை எண்.9 முதல் 13 வரையுள்ள கடைகளுக்கு கோரியுள்ள ஏலத்தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட 25% அதிகமாகவுள்ளது. கடை எண்.15–க்கு கடந்த வருட குத்தகை தொகையினை விட 3 மடஙகு அதிகமாக உள்ளது. ஆணையாளரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

வரிசை எண்.4 வெட்டுவெந்நி நகராட்சி அலுவலக முன்னால் உள்ள 7 கடைகளில் கடை எண்.1, 2, 3, 4, 5–க்கு 1 நபர் வீதம் ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். அவர்கள் கோரியுள்ள ஏலத்தொகையானது கடை எண்.1–க்கு 28% அதிகமும், கடை எண்.2–க்கு 30% அதிகமும், கடை எண்.3–க்கு 72% அதிகமும், கடை எண்.4–க்கு 40% அதிகமும், கடை எண்.5–க்கு ஏற்கனவே கடை நடத்திவரும் உள்குத்தகைதாரர் மாற்றுத்திறனாளி ஆகையால் மாதவாடகை தொகை ரூ.8000/–க்கு வழஙகப்பட்டது. கடை எண்.6, 7–க்கு எவரும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை.

வரிசை எண்.5 வெட்டுவெந்நி பி.பி. முனிசாமி வணிகவளாக 23 கடைகளில் தரைதள கடை எண்.2, 3, 4, 5, 8, 9 முதல் தள கடைகள் 2, 6 முதல் 13 வரையுள்ள 15 கடைகளுக்கு எவரும் வைப்புத் தொகை செலுத்தவில்லை. மீதமுள்ள கடைகளுக்கு ஏலகேள்வியானது தரைதள கடை எண்.1–க்கு கடந்த வருட குத்தகை தொகையினை விட 20% அதிகமாகவும், தரைதளம் கடை எண்.6, 7 ஆகிய 2 கடைகளுக்கு கடந்த வருட குத்தகை தொகையினை விட 10% அதிகமாகவும், தரைதள கடை எண்.10–க்கு ஏலத்தொகை குறைவாக கோரியுள்ளார். முதல்தள கடைஎண். 1, 3–க்கு கடந்த வருட குத்தகை தொகையினை விட அதிகமாக உள்ளது. கடை எண்.5, 6 ஆகிய 2

கடைகளுக்கு கடந்த வருட குத்தகை தொகையினை விட 60% அதிகமாகவுள்ளது. ஆணையாளரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

வரிசை எண்.6 குழித்துறை வணிகவளாக 8 கடைகளில் கடை எண்.4, 6, 7–க்கு எவரும் வைப்புத்தொகை செலுத்தவில்லை. கடை எண்.1, 2, 3, 5, 8 ஆகிய கடைகளுக்கு கோரியுள்ள குத்தகை தொகையானது கடந்த வருட குத்தகை தொகையினை விட 1 மடஙகு அதிகமாகவுள்ளது. ஆணையாளரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

வரிசை எண்.7 மார்த்தாண்டம் பேருந்து நிலையத்திலுள்ள எ.பிரிவிலுள்ள கடை எண்.4–க்கு ஒருநபர் ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை தொகை ரூ.10,600/–க்கு கோரியுள்ளார். ஆணையாளரின் பார்வைக்கும் முடிவிற்கும்.

ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரத கடைகளுக்கு மறுஏலம் / மறுஒப்பந்தப்புள்ளி தொடர் நாள்களில் நடத்த மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்றத் தீர்மான எண். 3205**

**உச்ச தொகை கோரியவர்களுக்கு உரிமம் வழஙகலாம்.**

<u>பொருள் எண் . 8</u>

மார்த்தாண்டம் பேருந்து நிலையம், மனோ ஹோட்டல் முன்பக்கம் ஆக்கிரமித்து பெட்டிக்கடை நடத்தி வந்த திருமதி. பாலம்மாள் என்பவர் கடையை அப்புறப்படுத்த கூடாது என நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் WP (MD) No.23478 of 2018-ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு, நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி வழக்கு நடத்திய வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/– வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் என்பவர் கோரியுள்ளார். எனவே மேற்படி வழக்குண்டான தொகையினை பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2819/2018/ந.அ.ஆ.

**நகர்மன்றத் தீர்மான எண். 3206**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 9</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகளுக்கு 20–11–2018–ல் நடைபெற்ற பொது ஏலம் விளம்பரம் தினதந்தி பத்திரிகையில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பர கட்டணம் ரூ.19,681/–க்கும் வரப்பெற்றுள்ளது. தொகையினை மேற்படி நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3207**

**அஙகீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 10</u>

குழித்துறை நகராட்சி பொது சொத்துவரி சீராய்வு தொடர்பாக மறுபரிசீலணை செய்து இறுதி செய்யப்பட்ட சீராய்வு அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிட தலா ரூ.2,100/– 8 பக்கங்களுக்கு ரூ.16,800/–க்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.2035/2018/அ1.

**நகர்மன்றத் தீர்மான எண். 3208**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 11</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வணிகவளாக கடைகள் 20–11–2018–ல் பொது ஏலம் நடைபெறுவதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக கருங்கல் சாலை கடை உரிமைதாரர்கள் 25 நபர்கள் வழக்கு எண்.W.P.Nos.22851 to 22859 மற்றும் 22905 to 22919, 22983/2018–ன்படி வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கிற்காக நகராட்சி நிலை வழக்கறிஞர் திரு.P. ஆதிமூலபாண்டியன் அவர்கள் நகராட்சி சார்பில் வழக்கு வாதாடிய வகையில் 25 வழக்குகள் சேர்த்து வழக்கு கட்டணமாக ரூ.2,50,000/–ம் வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3209**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 12</u>

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ2/194/2016, நாள் 11–02–2018–ல் ஏற்கனவே டெங்கு பணிக்கு வழங்கப்பட்ட தினகூலி தொகை ரூ.430/–லிருந்து நாள் ஒன்றுக்கு ரூ.180/– குறைவு செய்து ரூ.250/– வீதம் வழங்க அனுமதியளித்தன் அடிப்படையில் குழித்துறை நகராட்சியில் டெங்கு பணிக்கு என பணியாற்றும் 20 பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க வேண்டியுள்ளதால் 1–11–2018 முதல் 31–01–2019 வரை உத்தேச செலவினம் ரூ.4.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.1013/2018/அ2.

**நகர்மன்றத் தீர்மான எண். 3210**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 13</u>

தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள் 12–09–2017 மற்றும் உறுப்பினர் செயலர் தமிழ்நாடு மாநில மறுசீரமைப்பு ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள் 19–10–2017–ன்படி குழித்துறை நகராட்சியில் 21 வார்டுகளுக்கும் மறு சீரமைப்பு செய்து மறுவரையறை செய்ய வேண்டி பத்திரிகை விளம்பரம் செய்த வகைக்கு தினமுரசு நாளிதழிடமிருந்து ரூ.5,355/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3211**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 14</u>

தூய்மை பாரத இயக்கம் 2018–2019–ன்கீழ் குழித்துறை நகராட்சி பகுதியில் Bio-Mining, M.C.C. மற்றும் Battery Operator Vehicle வாங்குதல் ஆகிய பணிகளுக்கான 8–10–2018–ம் நாளய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.22,418/– Ravi Publicity Service-க்கு வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி மேற்படி பட்டியல் தொகை வழங்கியமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3212**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 15</u>

தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2018–2019 – ஆம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறைக்கான **மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14–** ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்க தானியஙகும் குடிநீர் மையஙகள் நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சியில் உள்ள **21** வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணற்று நீரை ஆதாரமாகக்கொண்டு தீவிர வடி கட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழஙகும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத்தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத்தொகை **ரூ.18.00** இலட்சம் வீதம் மொத்தம் 21 வார்டுகளுக்கும் **ரூ.378.00** இலட்சம் ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் **CSR** மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே நகரில் உள்ள

அனைத்து வார்டுகளிலும் வார்டு 1–க்கு ஒன்று வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் **(Automatic Water Vending Centers)** தனியார் தொழில் நிறுவனங்கள் /தொழில் முனைவோர்கள் **CSR** மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும் அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்ப நுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக , அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் **Expression of Interest** விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து வார்டுகளிலும் செயல்படுத்தவும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மன்றம் அனுமதிக்கலாம்
அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை செயல்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோரி கடிதம் அனுப்பப்பட்டதையும் மன்றம் அனுமதி வழஙகலாம்.

**நகர்மன்றத் தீர்மான எண். 3213**
**அங்கீகரிக்கப்பட்டது**

<u>பொருள் எண் . 16</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் தினசரி சந்தையினுள் 2007–2008–ம் ஆண்டில் நகராட்சி பொதுநிதியின்கீழ் கட்டப்பட்டுள்ள 150 கடைகளில் மீன் சந்தைக்கு அருகாமையில் மேற்கு பக்கமுள்ள 34 கடைகளை இடித்து விட்டு அவ்விடத்தில் அரசின் திட்டப்பணியான Micro Compost centre அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சியால் இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி பணியினை செயல்படுத்தும் பொருட்டு அவ்விடத்தில் அமைந்துள்ள 34 கடைகளை உடனடியாக காலி செய்து நகராட்சி வசம் ஒப்படைக்க கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1231/2018/இ1, நாள் 25–10–2018, 31–10–2018 மற்றும் 9–11–2018 ஆகிய தேதிகளில் குத்தகைதாரர் திரு.எம். கிறிஸ்துராஜ் என்வருக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி தினசரி சந்தையினை குத்தகை உரிமம் அனுபவித்து வரும் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவர் நகராட்சி ஆணையரால் அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு எவ்வித பதிலும் தெரிவிக்காமலும் மேற்படி 34 கடைகளை காலி செய்யாமலும் இருந்ததுடன் சந்தையிலுள்ள கடை வியாபாரிகளுடன் சேர்ந்து சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படும் வண்ணம் நகராட்சிக்கு எதிராக செயல்பட்டதால் அரசின் திட்ட பணியான Micro Compost centre பணியினை அவ்விடத்தில் செயல்படுத்த இயலாதநிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் மேற்படி சந்தையில் சேரும் குப்பைகளை குத்தகைதாரர் தமது சொந்தப் பொறுப்பில் ஆட்களை நியமித்து தினசரி அகற்றப்பட வேண்டும் என்பது குத்தகை நிபந்தனை ஆகும். ஆனால் சந்தைக்குள் சேகரமாகும் குப்பைகளை தினசரி அகற்றாமல் தேக்கி வைத்து பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டமையால் பொதுமக்கள் மற்றும் கருஙகல் சாலை கடை குத்தகை உரிமத்தாரர்களிடமிருந்து நேரடியாக பல்வேறு புகார்கள் வரப்பெற்றது. இப்புகார்கள் தொடர்பாக நகராட்சி ஆணையர் சுகாதார அலுவலருடன் 20–11–2018 அன்று சந்தையில் நேராய்வு செய்த போது சந்தை குத்தகை உரிமத்தாரர் குப்பைகளை அகற்றாமல் தேக்கி வைத்து பொதுமக்களுக்கு சுகாதாரசீர்கேடு விளைவித்தது உறுதிபடுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி குப்பைகளை உடனடியாக அகற்றி சந்தையினை சுகாதாரமாக வைத்திட இவ்வலுவலக அறிவிப்பு கடிதம் 1231/2018/இ1, நாள் 20–11–2018–ன்படி குத்தகைதாரருக்கு

அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் இதுநாள் வரையிலும் மேற்படி குப்பைகளை அகற்றாமல் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் குத்தகை உரிமதாரர் செயல்பட்டு வருகிறார். ஆணையரின் அறிவிப்புகளை உதாசீனப்படுத்தியும், திட்டப்பணியினை செயல்படுத்த இடையூறாகவும், குத்தகை விதிமுறைகளை மீறி செயல்பட்டமைக்கும் திரு.எம். கிறிஸ்துராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட தினசரி சந்தை குத்தகை உரிமத்தினை ஏல நிபந்தனைவிதிகள் எண்.23, 49, 67 மற்றும் சிறப்பு நிபந்தனை எண்.10–ஐ மீறி செயல்பட்டதால் தினசரி சந்தை குத்தகை உரிமம் 31–12–2018 உடன் ரத்து செய்யப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 3214**
**அங்கீகரிக்கப்பட்டது**

ஆணையாளர் (கூ.பொ.) மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.